Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுகஹூ தை மீ ௧௧ உ (1—2—34) } No. 10

திருக்களிற்றுப் படியார்

அரண வுணர்வுதனி லவ்வுணர்வை மாற்றிற்
கரணமுங் காலுங்கை கூடும்—புரணமது
கூடாமை யுங்கூடுங் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து.

தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பான் மஞ்சனநீர் தாமாட்டித்—தம்மையொரு
பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தா
லோவாமை யன்றே யுடல்.

வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
யூனகத்தே யுன்னுமதே னென்றனையே—லேனகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா
மாதனமே யன்றோ வதற்கு.

உ

திருவருள் துணை.

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,
ஸ்ரீமுக தைமீ 19உ

நாதம்

நாதம் என்பது என்னை? நாதம் என்பது ஒலி எனப்படும். ஒலி, ஒளி, ஓசை, இயக்கம், அசைவு என்பன ஒன்றேயாம். அண்டமும் பிண்டமுமாய் விளங்கும் இவ் உலகம் நாதமயமாய் இருக்கின்றது. நாதம் எதனால் உண்டாகிறது? இயக்கத்தால் உண்டாகிறது. இவ் இயக்கமாகிய அசைவை மேலைத் தேச விஞ்ஞானிகள் "வைப்ரேஷன்" (Vibration) என்பர். ஓசை யெல்லாம் இயக்கத்தால் உளவாகின் அவையெல்லாம் பயனுடையனவே. அப் பயனும் பல வகையினவாகும். தீய அசைவுகளால் தீய பயனும் நல்ல அசைவுகளால் நல்ல பயனும் உளவாகின்றன. இவற்றால் ஏற்படும் மாற்றங்களுக்கோ அளவில்லை. இவ் இயக்கமாகிய-இயக்கத்தாலாகிய நாதம் இல்லாவிடின் உலகமே இல்லை. சிவமும் சத்தியுமாய்-சத்தும் சித்துமாய்-மெய்யும் உயிருமாய் விளங்கும் இப் பிரபஞ்சம், சத்தொலி சித்தொலி என்னும் இரண்டன் கூட்டமாகும். வியாப்பியமாகிய கௌணநிலை சத்தொலியாகும். வியாபகம் பெற்றபோது-மலர்ந்தபோது சித்தொலி விளக்கம் உளதாகும். வியாப்பியத்தில் ஒன்றே. வியாபகத்தில் இரண்டு எனப்படும். சத்தொலி தாமத இயக்க முடையது. சித்தொலி அதிக நிறை கொண்ட இயக்கமாகும்-துரித இயக்க முடையது. இயக்கம் என்பதில் இரண்டு பொருள்கள் உள. இரண்டில்லாமல் சத்தம் இல்லை. இயக்கம் என்பது அசைவு. அசைவு என்பதில் சத்தம் உண்டு. அசைவினால் உண்டானது சத்தம். ஒன்றுக்கு மற்றொன்று அதிக மாத்திரை—நிறை பெறுவதே நீண்டது—விரிந்தது என்பது.

உலகம் பஞ்ச பௌதிக சொரூபமாதலால் அப்பௌதிகங்களின் இயக்கத்தால் ஒலி உளவாகின்றன. அவ் இயக்கம் நாத வடிவாக-ஒலி வடிவாக உணரப்படுகின்றன—விரிகின்றன. நமக்கு உள்ளும் புறம்பும் சூக்குமதூலங்களாய் விளங்கும் பஞ்சதநுக்களின் இயக்க வேறுபாட்டால்-நிறை வேறுபாட்டால் பலவகையான நாதங்கள் உளவாகின்றன. ஓசையால் உணர்ச்சி உண்டாகிறது. அதனால் மனமும் சரீரமும் மாற்றமடைகின்றன. ஒலிவரிவடிவாயும்பிழம்பாயும்கேட்கப்படும் ஓசைகளால் உலகத்துள்ள பொருள்கள் பலவகையான வேறுபாடுகளை அடைகின்றன. சான்றோர் நன்மொழிகளும் சங்கீத இசையும் குழலி மழலையும் நமது மனதுக்கும் அதன் வாயிலாகச் சரீரத்துக்கும் இன்பமளிக்கின்றன. ஒலிவரிவடிவாகிய தமிழை-பாஷையை நிறை முறையோடு பஞ்சீகரணித்து வழங்குவதால் அஃது அமுதமாகி முன்னிலைகளில் சுத்த அக்கினி ஆக்கமுற்று நன்மையான மாற்றங்கள் உளவாக்கலும், அதனையே நிறை முறையின்றிப் பஞ்சீகரணித்து வழங்குவதால் அது நஞ்சாகி முன்னிலைகளில் அசுத்த அக்கினியை ஆக்கமுறச் செய்து தீய மாற்றங்களை உளவாக்கலும் கண்கூடு. இது போலவே சடப் பொருள்களிலும் ஓசை வேறுபாட்டால் நல்லவும் தீயவுமாய பலப்பல மாற்றங்கள் உளவாகின்றன. கீழே காட்டப்படும் ஆராய்ச்சிக் குறிப்புக்களாலும் இவ் வுண்மை ஐயமின்றிச் செவ்விதின் உணரத்தகும்.

"சத்தத்தின் அற்புத சக்தி"

"நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையின் சாராம்சம் வருமாறு:

"சத்தம் மரத்தில் தீ மூட்டும்; "கண்ணாடியில் துவாரம் செய்யும், "தண்ணீரின் நிறத்தை மாற்றும், "தொட்டியிலுள்ள மீனைக் கொல்லும் "என்றால் யார் தாம் அதிசயப்படமாட்டார்கள்? ஆயினும் இந்த அற் "புதங்கள் அமெரிக்காவிலுள்ள ஒரு "விஞ்ஞான ஆராய்ச்சிக் கூட்டத்தில் "நடந்துவருகின்றன. ராபர்ட் உட் "என்னும் விஞ்ஞானிக்கு மிஸ்டர் "லூமிஸ் என்னும் பெருஞ் செல்வர் "தமது சொந்த வீட்டில் ஆராய்ச்சி "மண்டபம் கட்டிக்கொடுத்து அதற்கு "வேண்டிய இயந்திர சாதனங்களையும் "அவருக்கு செய்து கொடுத்திருக் "கிறார். மேற் கூறிய காரியங்களைச் "செய்யக் கூடிய சத்தம் எவ்வளவு "பயங்கரமான பெருஞ் சத்தமாயிரு "க்க வேண்டுமென்று சொல்ல வேண் "டியதில்லை. மின்சார சத்தியின் "மூலம் இத்தகையசத்தங்கள்உண்டா "க்கப் படுகின்றனவாம். இதில் ஒரு "விநோதம் என்ன என்றால், அவ்வ "ளவு பெரிய சத்தங்களால் காது "செவிடுபடா வண்ணம்பஞ்சு வைத்து "அடைத்துக்கொள்ள வேண்டியதில் "லையாம். ஏனெனில், அந்த அதி

“சத்தங்கள் காதிலேயேவிழமாட்டா. சத்தம் பெரிதாயிருப்பதும் சிறிதாயிருப்பதும் சத்த அலைகளின் வேகத்தைப் பொறுத்ததாகும். அதாவது விநாடிக்கு ஆயிரம் சத்த அலைகள் உண்டானால் அது சிறு சத்தம்; பதினாயிரம் அலைகள் உண்டானால் அது பெரிய சத்தம். சாதாரணமாக விநாடிக்கு 20,000 அலைகளுக்குள் இருந்தாற்றான் மனிதனுடைய செவியில் சத்தம் கேட்குமாம். அதற்கு மேல் போய்விட்டால் அந்தச் சத்தத்தை உணரும் சக்தி காதுக்கில்லையாம். நாம் மேற்கூறிய அற்புதங்களைச் செய்யும் சத்தமோ விநாடிக்கு 300,000 அலைகள் உடையதாகும்.”

“இந்த ஆராய்ச்சியினால் என்ன பயன் விளையுமென்று இப்போது சொல்லமுடியாது. “டைனமோ”வைக் கண்டுபிடித்த பாராடே என்பவர் முதலில் ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்த போது இப்படி ஒருவர் கேட்டதற்கு “குழந்தை பிறப்பதால் என்ன பயன்?” என்று திருப்பிக் கேட்டாராம். விஞ்ஞான உண்மைகளைக் கண்டுபிடித்தல் முதன்மையானது. அதைக் காரியத்தில் பயன் படுத்துவதைப் பற்றிப் பின்னால் யோசித்தல் வேண்டும். ஆசிரியர் “உட்” உம் மிஸ்டர் “லூயிஸ்” உம் அத்தகைய ஆரம்ப ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

இவர்கள் செய்திருக்கும் காரியங்களில் சில வருமாறு:—“ஒரு தொட்டியில் எண்ணெயை நிரப்பி அதன் வழியாக அதீத சத்த அலைகளை அவர்கள் புகவிட்டார்கள். பின்னர் எண்ணெயில் ஒரு கண்ணாடித் தடியைப் போட்டு எடுத்தார்கள். அந்தத் தடியைக் கைவிரலில் வைத்த போது அங்கு நெருப்புச் சுட்டாற்போல் காயமாகிவிட்டது. பின்னர் அதை மரத்துண்டில் வைத்தார்கள் அதிலிருந்து புகையும், தீப் பொறிகளும் வர ஆரம்பித்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த இடத்தில் ஒருபொத்தல் போட்டாகிவிட்டது. கண்ணாடித் தட்டு ஒன்றிலும் இதே விதமாக துவாரம் உண்டாக்கி முடிந்தது. “எண்ணெயும் தண்ணீரும் கலவா” என்னும் பழமொழியை மேற்படி அதிவேகச் சத்த அலைகள் பொய்யாக்கின. தண்ணீரின் மீது மிதந்த எண்ணெய் வழியாக அவற்றைச் செலுத்திய போது, இரண்டு திரவங்களையும் அவை மிக மிகச் சிறு துளிகளாகப் பிரித்து ஒன்றோடொன்று கலந்துவிடும்படி செய்தன. இன்னும் அவை இரசாயனச் சூழ்ச்சிகள் பலவும் புரிந்தன. பளிங்கு போன்ற நிறமற்ற ஜலத்தில் அவ்வலைகளைச் செலுத்திய போது ஜலம் நீல நிறமாக மாறிற்று. மற்றும் பொருள்களின் வெளிப்புறத்தைப் போலவே உட்புறத்தையும் பாதிக்கும் சக்தி அவற்றிற் குண்டென்று தெரிந்தது. பனிக்கட்டிகள் அவ்வலைகளால் தாக்கப்பட்டபோது உள்ளும் புறமும் ஒரே சமயத்தில் உருகிக் கரைந்தன. உயிர்களைக் கொல்லும் சக்தி அவற்றிற்கு அதிகம் உண்டெனத் தெரிந்தது. ஒரு தொட்டியில் நீர் நிரப்பி அதில் தவளைகளையும் மீன்களையும் போட்டு மேற்படி சத்த அலைகளைச் செலுத்தினார்கள். மீன்களும் தவளைகளும் ஒரு நொடியில் மாண்டன. வருங்காலத்தில் நோய்க் கிருமிகளைக் கொல்லுவதற்கு இந்த ஆராய்ச்சி பெரிதும் பயன்படலாம் என்று கருதப் படுகிறது.” (நவ சக்தி.)

ஓசையால் சராசரப் பொருள்களில் நிகழ்ந்த மாறுபாடுகள் மேலே கூறியவாற்றால் வெள்ளிடை மலையாயிற்றன்றோ! புறம்பே நிகழும் பௌதிக ஒலிகள் இத்துணை மாறுபாடுகளை விளைக்கும் ஆற்றல் உடையனவாயின், நமது சரீரத்துள்ள தூல சூக்கும பஞ்ச தனுக்களின் இயக்கத்தால் விளையும் ஒலிகளின் ஆற்றல் சீவர்கள் சிந்தனை சொல் செயல்களுக்கு அளவு படுவனவாகுமா? இத்தகைய நாதங்களைக் கேட்ட தத்துவப் பெரியார் உடலுயிர்களை இந்நாதங்கள் விமலமாய் அமலமாய் மாற்றி “ஊன் உயிர் வேறு செய்”து அன்னவரை நித்தியராக்கியதும் வியப்பாகுமா? “சரீரத்துள்ளே உள்ள நாதங்களைக் கேட்டோம்” எனக் கூறினோர் பலர் உடலைவிட்டு உயிர் பிரிய அவர் இறந்து விட்டனரே எனப் பலர் கருதலாம். அதற்கு உத்தரம் யாது எனின், அன்னவர் அசுத்த நாதங்களை மட்டுமே கேட்டு அமைந்தவராவர் என்பதேயாகும். சுத்த பௌதிக நாதங்களை நாதங்களாகிய வேதங்களை முறையாகக் கேட்டுணர்ந்த வித்தகர்க்குச் சாதல் ஏது? அவர் அசுத்தநிறையென்னும் காலனை வென்று நித்தியத்துவம் அடைதல் திண்ணம். எத்தனையோ இருடிகளும் முனிவர்களும் சமய குரவர் முதலிய மெய்யடியாரும் சூக்கும கல்பமாகிய சுத்த நந்தி நாதங்களை உண்டு - கேட்டுணர்ந்து நித்தியத்துவம் அடைந்தவரே யாவர்.

புறம்பே நிகழும்ஒலிகளாகிய நாதங்களால் மாற்றங்கள் பல ஏற்படுதல் போலவே, நமது சரீரத்துள்ளே நிகழும் பௌதிக இயக்கமாகிய ஒலிகளால் அளவிலா மாறுபாடுகள் உடலுயிர்களில் ஏற்படுவது திண்ணம். இதுவே இயற்கை முறை. நமது செவித் துவாரத்துள் கைவிரலை வைத்து அதனை அடைத்துக்கொண்டு சிறிது நேரம் இருத்தலால் உள்ளே “ஓ” என்று இரையும் ஒலி கேட்கப்படும். இதனால் நமது சரீரமாகிய உடலும் நாத முடையதுஎன்பது கண்கூடாக அறியப்படும். இது பொதுவான-சமஷ்டியான இரைச்சல் ஒலி; இவ் ஒலியின் வியஷ்டி ரூபமாய் தூல சூக்குமமாய் விளங்கும் கூறுபாடுகள் பலவற்றைக் கேட்டுணர்வதென்றால், அதற்கு ஆசான் வேண்டும். மன அமைதி பெற்று ஆசான் உரைப்படி வழுவற ஒழுகினால் இவ்வொலிகள் முறையே கேட்கப்படும். இவற்றைக் கேட்டலால் ஆம் பயன் என்னை? எனின், சரீரமாகிய கடல் கடையப்பட்டு அமுதம் எடுக்கப்படும்- ஆலம்

அமுதமாகும் - "அருளொடு பராவமுதாக்" கப்படும். கஞ்சமயமாகிய புலால் துருத்தி அமுதமயமாகிய பூந்துருத்தியாகும் என்க. இதனால் அம்மையப்பர் திருவருளுக் கிலக்காகி நித்தியத்துவம் எற்படும்.

நமது சரீரத்துள்ள நாதங்கள் அசுத்தமும் சுத்தமும் என இருவகையினவாகும். ஒவ்வொரு சரீரமும் சுத்தமும் (சூக்கும பூதம்) அசுத்தமுமான (தூலபூதம்) பௌதிகங்களை உடையது என்பது வெள்ளிடை. எனினும் அசுத்த பௌதிகமே ஒவ்வொரு சரீரத்திலும் ஆதிக்கம் பெற்றிருப்பதென்பது அறிவுலகம் அங்கை நெல்லியெனக் கண்டதேயாம். அசுத்த பௌதிக தநுவும் நாதமுடையது. சுத்த பௌதிக தநுவும் நாதமுடையது. அசுத்த நாதங்களை சிலர் பலரால் ஒருவாற்றான் எளிதில் அறியக் கூடியன. தற்காலயோகிகளால் புகழப்படுவனவும் இவையே. ஓடுகின்ற மூச்சை செயற்கையான சில முறைகளால் ஒருவாறு அடக்கப் பழகினால் செவியானது ஒருவகையாக அடைபடும். அப்பொழுது அசுத்த பௌதிக தநுக்களின் இயக்கத்தாலாய நாதம் கேட்கப்படும். இதனைத் தான் ஹடயோகிகள் — உபாசனையாளர் — சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் தச நாதம் என ஒலமிடுவர். இது அசுத்த நிறையுடைய பௌதிக இயக்கத்தாலாய நாதமாதலால் அசுத்த நாதம் எனப்படும். சுத்த பௌதிக தநுவின் இயக்கத்தாலாய சுத்தநாதங்களை யன்றி — சுத்த சக்தி நாதங்களை யன்றி இவ் அசுத்த நாதங்கள் சரீரத்தை அமலம் பெற மாற்றமாட்டா — ஊன் உயிரை வேறு செய்யமாட்டா. இவற்றைக் கேட்டு அமைந்து விடுத்தலால் காலனை வெல்ல முடியாது. இவ் அசுத்த நாதம் விருத்தி அடைய அடைய சரீரத்துள்ள அசுத்த நிறை அதிகப்பட்டு வாத பித்த சிலேட்டுமங்களின் குறைவு மிகுதிகளால் பௌதிகங்கள் பேதப்பட்டு பிணி எனும் பாதகனால் கட்டுண்டு சிறிது சிறிதாகத் தென்றிசையே நோக்கிச் செல்கின்றவராவர். இவற்றைக் கேட்டு அமைபவர் அசட்டு யோகிகள் என அறிதற்பாற்று. இவர் எவ்வளவு சித்துக்களை — மருட்சித்துக்களை ஆடி உலக மாக்களை மயக்குபவராயினும் இயற்கை விரோதமாக "வாயோடு கண்மூடி மயக்கமுற்று," இயல்பாகவே ஓடுகின்ற மூச்சை ஒருவகையான் அடைத்துக்கொண்டு சில மருந்துகளால் ஒருவாறு காயசித்தியும் செய்து கொண்டு எத்தனைக்காலம் அசைவற விற்றிருப்பவரே யாயினும் ஈற்றில் தென்புலக் கோமகனுக்கே நல்விருந்தாவர் என்பது திண்ணம். இன்ன நீராரை நோக்கியே பின்வரும் திருமந்திரம் எழுந்தது என அறிதல் வேண்டும்:

திருமந்திரம்

எண்ணாயிரத் தாண்டு யோக மிருக்கினும்
கண்ணா ரமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கிடில்
கண்ணாடி போலே கலந்திருந் தானே.

(ஷை-3ம் தந் 7-வது. தியானம். செ. 6)

இன்னும் இவ் வுண்மை பின்வரும் தத்துவப்பெரியார் பாடல்கள் பலவற்றால் நன்கு உறுதிப்படுத்தப்பட்டமை கண்டு கொள்க.

திருவாசகம்

"..
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருத்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
...."

(ஷை திருவண்டப் பகுதி)

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
யுண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன வென்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேனின்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(ஷை செத்திலாப் பத்து செ. 2.).

அப்பர் தேவாரம்.

நன்றுநோக்கிலென்பட்டினியாகிலென்
குன்றமேறியிருந்தவஞ்செய்யிலென்
சென்றுநீரிற்குளித்துத்திரியிலென்
என்றுமீசனென்பார்க்கன்றியில்லையே. (8)

கங்கையாடிலென்காவிரியாடிலென்
கொங்குதண்குமரித்துறையாடிலென்
ஒங்குமாகடலோதநீராடிலென்
எங்குமீச னெனாதவர்க் கில்லையே. (2)

(ஷை பாவநாசம்-திருக்குறுந்தொகை)

கந்தரலங்காரம்.

துருத்தி யெனும்படி கும்பித்து வாயு [வைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாஞ் [சிவ யோகமெனுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு [நாதன்சொன்ன
கருத்தைமனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி [கைகண்டதே.
செ. 71).

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் [தைப்புகட்டின்
வீட்டிற் புகுத மிகவெளி தேவிழி நாசி [வைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட [மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக் [கும் யோகிகளே.
(செ.85).

பலகோடி சென்ம நற்றவப்பயனாக முன்னிலையில் குருவடிவாய்ப் போதரும் கயிலை முதற்குரவனாகிய எம்பெருமான் அருளால், தூல கற்பம் உண்டு பூதியத் தூய்மை யடைந்து ஆறறிவு பூரணம் பெற்ற மானிடராகிய மெய்யடியாரே அன்னவன் உபதேசத்தால் சூக்கும கற்பம் எனப்படும் சுத்த பௌதிக இயக்கத்தாலாய அமல நாதங்களைக் கேட்டற்கு அருகராவர். ஓங்காரத் துட்பொருளாகிய மகார வித்தை என்னும் மௌன மந்திராதிக்ய வித்தை இவர்க்கு எம்பெருமானால் உபதேசிக்கப்படும். மௌனம் என்றால், உலகப் போலிஞானிகள் போல வாய்பேசாது விற்றிருத்தலன்று. மௌனிக தந்திரமாகிய சத்துவம்

மௌனம் என்பன போலியாகும்—பொய்யாகும். பின்னர் அதுதான் யாதெனின் பின்வரும் சித்தர் பெருமானாகிய சட்டைமுனிவர் திருவாக்கு நோக்கி அறியத்தகும் :

மௌனவித்தையேதென்றால் மூன்றெழுத் [தென்பார்
மாட்டுகிற வினங்காணார் மார்க்கங்காணார்
மௌனவித்தை யாவதென்ன வாய்மூட [லென்பார்
மாடுமுதற் குதிரை யினலாவதென்ன?
மௌனவித்தை கேட்டிருப்பார் கூட்டுறவு [காணார்
வாய்மூடி வழியோடே நாதங்கேளார்
மௌனவித்தை ஆசான்முன் தாண்டிக் [காட்டில்
மணிமுதலாய்த் தசநாதங் கேட்குந்தானே.

இவ்வாறு மகா வித்தையே சித்தர் நூல்களில் பல பரிபாஷைகளால் கூறப்படும். இது அரிய பெரிய இரகசியம். இதனை குருவருளால் பெற்றுப் பயிலாதவன் பேரின்பத் தடம் புக முடியாது. மௌன வித்தையைக் குருவருளால் பெற்றுப் பயின்ற மெய்யடியாராகிய சிவயோகிகளால் கேட்கப்படும் சுத்த நாதங்கள் பின் வரும் திருமூலர் திருவாக்காலும் நன்கு புலப்படும்.

திருமந்திரம்

மணிகடல் யானை வளர்குழன் மேக
மணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண்
ணாதே. 9

கடலொடு மேகக் களிறொடு மோசை
அடலொடு மவ்வினை யண்ட ரண்டத்துச்
சுடர்மன்னு வேணு சுரிசங்கி னோசை
திடமறி யோகிக்கல்லாற் றெரி யாதே. 10.
(ஷை 3-ம். தந் 7-வது தியானம்)

சூக்கும கற்பமாகிய இச்சுத்த நாதங்களை எம்பெருமான் அருளால் பெற்று உண்டு உண்டு வர—அதட்டித்து வர அஞ்ஞானமாகிய இருள் அணு அணுவாக நீறும். படியேற்றம் உளதாகும். படி அணி என்பன ஒன்றே. இவற்றையே சித்தர் பெருமக்கள் வரைகள் என்றனர். ஆறுபடிகள் என்னும் ஆறுவரைகளையும் தாண்டி அப்பால் செல்லவேண்டும். ஏழாவது படிதான் சப்தஸ்தானம். ஒலியாகிய நாதம், தசநாதம், கிண்கிணி நாதம், வீரகண்டாமணிச் சிலம்பொலியாகிய நாதம், சங்கநாதம், பஞ்சநாதம் (இதுவே பஞ்சநாதம், திருஅடி, ஐயாறு, இடு குறித்தலம்) பறைநாதம் என்பன முதலிய நாதங்களை ஒருவன் கேட்பானுபின் அவனுக்குச் சாதல் ஏது? வேத வாக்கியம் பொய்யாகுமா? உலகம் அழியினும் பொய்படாது. சூக்கும கற்பமாகிய நாதங்களால் சூக்கும உடம்பு தூய்மை அடையும். அடையவே தூலமும் தூய்மை அடையும் — அமலமாகும். சூக்கும அமலமடையாத போது தூலமும் அமலமடையாது. ஆதலால் சூக்கும்கல்பமாகிய நாதங்களைக் கேளாதவன் பாசம் நீங்கி முத்தி யடைவதென்பது முயற் கொம்பே யாகும். இச்சுத்த நாதங்களைக் கேட்கும் மெய்டியார் உடலில் எம்பெருமான் குடிபுகும் உண்மை பின்வரும் ஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கால் நன்கு புலப்படும்.

பறையின்னொலி சங்கின்னொலி பரங்கார [வுமார
அறையும்மொலி யெங்கும்மவையறிவாரவர் [தம்மை
நிறையும்,புனல் சடைமேலுடையடிகணின் [றியூரில்
உறையும் மிறையல்லதென துள்ளம் [உணராதே.
(திருநின்றியூர்.)

இச்சூக்கும கற்பமே எம்பெருமான் திருவடி. எம்பெருமான் வடிவமாகிய வேத ஒலி—வேதம். இச் சூக்கும கற்பமே "எம்பெருமான் முன்பான் முழங்கு முரசு" என மணிவாசகரால் புகழப்பட்டது. வேதங்கள் சிவ சக்தி தானத்தில் ஓவாது ஒலிப்பன என்பதன் பொருளும் இதுவே.

பின்வரும் திருவாக்குக்கள் இவ்வுண்மைகளை நன்கு புலப்படுத்தும்.

திருவாசகம்

"ஞானவாளேந்துமையர் நாதப் பறை [யறைமின்"
....'
(ஷை திருப்படை யெழுச்சி செ. 1

"..
ஓசையாலுணர்வார்க்குணர் வரியவனுணர்
வுதந் தொளியாக்கிப்......"
(ஷை அற்புதப்பத்து செ. 8).

திருமந்திரம்

"..
ஓசையும் ஈசன் உணரவல் லார்க்கே"
(ஷை 3-ம் தந் 7-வது தியானம் செ. 11)

"..
பாடி யெழுகின்ற வேதாக மங்களு
நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே."
(ஷை 8-ம் தந் 11-வது நின்மலாவத்தை செ. 14).

ஞானசம்பந்தர் தேவாரம்

"..
நயக்குஞ்சோதி சாமவேதாகாமனைக்காய்ந் [தவனே
...."
(ஷை திருவலிவலம்-பண்-பழந்தக்கராகம் [செ. 2.

சுந்தரர் தேவாரம்.

"நாதனைநாத மிகுத்தோசையதானவனை
ஞானவிளக் கொளியை ஊனுயிரைப் [பயிரை"

சத்தாகிய உடலும் சித்தாகிய உயிரும் (சத்தொலியும் சித்தொலியும்) கூடிக் குழைந்து ஒன்றாங்கால் உளவாகும் இயக்கமெனும் ஒலிமயமே "அருட் குரு" என வேதம் முறையிடுகின்றது. வேதமாகிய ஆசான் ஆசானாகிய சிவம் முறையிடுகின்றது.

இச் சூக்கும கற்பம் சகச நிட்டையாளர்க்கே உரியது. சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர்—உபாசக நிட்டையாளர்க்கு எட்டாதது—அறியப்படாதது. அருளமுதம் என்பதும் இதுவே. அருளமுதம் உண்ணும் சகச நிட்டையாளரே "அச்சு" முரியப்

பெற்று தமது உடலம் அன்னுருக்கையாய்ச் சூக்குமமாய்க் கரைந்து அருள் வடிவாக உண்மைச் சைவமுத்தி அடைபவராவர். இவ்வுண்மையே பின்வரும் திருவாக்கால் கூறியருளப் பட்டது.

திருவாசகம்.

தச்ச விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்ச முரிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புர முந்தீபற
(ஷை - திருவுந்தியார் செ. 3.)

இங்கே "அடி" எனப்பட்டது சகச நிட்டையாளர்க்குரிய சூக்கும கற்பமாகிய வேத ஒலியாகும்—சாமகானமாகும்.

இந்நாதங்களெல்லாம் முறையே ஆக்கமுற்று—கேட்கப்பட்டு ஒடுங்க வேண்டும். இதுவே இயற்கை முறை. அப்பொழுது தான் ஆசான் தானேயாகும் பூரணமான சிவன் முத்தி நிலை கைகூடும். திருவாசகம் திருப்படையாட்சியை உற்று நோக்கி உணரும் பெற்றி உடையார்க்கே இவ்வுண்மை நன்கு புலப்படும்.

இதுகாறுங் கூறியவைகளால் ஒலி—ஒளி—அசைவு—இயக்கம்—நடனம் எனப்படும் நாதங்களின் வகைகளும் அவற்றாலாம் பயனும் ஒருவாறு விளக்கப்பட்டன. ஓசையே உலகத்துக்கு வித்து—உயிர். இதனாற்றான் நாம் உண்மை நிலையை அடைய முடியும். புறப்பே நிகழும் சங்கீத முதலிய வாத்தியங்களுக்கே உலக மாக்கள் மயங்கித் தம்வயம் இழந்து நிற்கின்றனர் என்றால், அகத்தே நிகழும் வாய்மையான வேத ஒலிகளால் உளவாகும் பேரின்பப் பெருக்கை யாரால் அளவிட்டுக் கூறமுடியும்? கண்டனரே—அநுபவித்தனரே அவற்றின் அருமைபெருமையை அறிய முடியும். இவை அமயம் நேர்ந்துழி மேலும் விளக்கிக் கூறப்படும்.

சுபம்!

உடம்பின் அருமை பெருமை

[9-வது வாரத்தொடர்ச்சி]

"உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய கந்தழி சிவம் எனும் செம்பொருள் எங்கோ வெகு தூரத்தில் கயிலை வைகுண்டம் முதலிய ஊர்களில் வீற்றிருப்பது எனக்கருதுவதும், கையைத்தூக்கி வானத்தைச் சுட்டிக்காட்டுவதும், பாலைக் கமரின்கண் உகுத்த பின் அப்பாலினின்றும் நெய் பெற முயல்வார் போல, உடம்பு அவச்சலனங்களால் பழுதடைந்து பிணமாகி அழிந்தபின்—சத்துப்போன பின்—செத்துப்போனபின்—உணர்ச்சியற்றபின்—சேதனம் பின்னப்பட்டபின் அக்கந்தழியை—சிவம் எனும் செம்பொருளை அடைந்து அதனோடு அத்துவிதமாகி முத்தியடையலாம் எனத் துணிவதும், யமன் என்று ஒருவன் எங்கோ வெகு தூரத்தில் இருந்து எருமைக்கடாவில் எறிவந்து எம்மைக்கொண்டு போய் விடுவான் என அஞ்சுவதும் அறிவிலார் மாண்பு. அசுத்த நிறையமைந்த இக்காயமேயன்றி—மலபாண்டமேயன்றி—நரக பாண்டமேயன்றி—கும்பியேயன்றி எமனூர்தியாகிய எருமைக்கடா வேறு எங்குள்ளது? அசுத்த தனுக்களாகிய இவ் எமனூர்திகள்—மஹிஷங்கள் புரியும் கோரணிகளைச் சொல்லவும் வேண்டுமோ? இவ் எமனூர்திகள் சிவனூர்தியானாலன்றி—ரிஷபதேகமானாலன்றி—ரக்ஷகதேகமானாலன்றி எமவேதனையினின்றும் நீங்க முடியுமா? மரணமடையாமல்—பிறவி நேரிடாமல் முத்தியடைய முடியுமா? விடையாக மாறிய மாலே—மால்விடையே—சத்தியே மஹிஷத்தன்மையை—மஹிஷ தேகத்தை மாற்றுவது மஹிஷாசுர சம்மாரஞ் செய்வது. மஹிஷாசுர சம்மாரம் முதலிய புராண உண்மைகளை அறிய முடியாத மஹிஷங்கள் சீவர்கள் பக்குவம் நோக்கி நிறைமுறை புனைந்த கற்பனைகளால் அரிய பெரிய மறைகளை அருளிய வியாசர் முதலிய பெரியாரை—மஹர்ஷிகளைக் குறை கூறுவதும் வியப்பாகுமா? வேதாகம புராணேதிகாசங்களின் உண்மைகளை வித்தியா சாமர்த்தியத்தால்—மேனாட்டு நாகரீக உத்தியமைந்த ஆராய்ச்சிகளால் அறிதல் முடியாத காரியமே. மேலே கூறிய கந்தழியை—ஆக்கையின் உறுபொருளை—"சாணகத்துள்ளே யழுந்திய மாணிக்க"த்தை பெறு முறையால் பெற்று உய்தியடையவேண்டுமென்றே பண்டைய சங்கச் சான்றோரும் செவியறிவுறுத்தினர். அரிய பெரிய சித்தர் நூல்களும் இவ்வுண்மையையே பல பரிபாஷைகளால் வற்புறுத்துவனவாகும். இவை அமயம் நேர்ந்துழி விரித்துக்கூறப்படும். இவ் அரிய பெரிய கந்தழியைப் பெறு முறையாற் பெற்று உய்தியடைந்த உண்மையையே—பிணநாற்றம் நாறும் "புழுக்கண் றுடைப் புன்குரம்பை"யானது பூமணம் கமழும் அமலக்குரம்பையாகிய பொன் குரம்பையாக மாறிய உண்மையையே பின்வரும் திருவாக்கால் நன்கு புலப்படுத்தியருளியது நமது மணிவாசகசிவம்.

திருவாசகம்,

பூவில் நாற்றம் போன் றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச் செய்த
[வொண்பொருள்
இன்றெனக்கெளிவந்திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி.
(ஷை திருவண்டப் பகுதி).

உற்ற ஆக்கை யினுறுபொருள் நறுமல
[ரெழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு
ளப்பொருள் பாராதே;
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
[பித்தர் சொற்றெளியாமே
அத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய
[அதிசயம் கண்டாமே.
(ஷை அதிசயப் பத்து செ. 8.)

இக்கந்தழியை ஆக்கை அழிந்தபின்—பிணமானபின்—உணர்ச்சியற்றபின்—சேதனம் பூரணப்படாது பின்னமடைந்த பின் பெறலாம் எனத்துணிவார் அறியாமை என்னே! மாயையைக் கண்டவரே—அடிப்படுத்தியவரே—சரீரத்தை வசப்படுத்தியவரே—நித்தியப்படுத்தியவரே "மா" எனப் பூத்த "ஐ"யைக்கண்டவர்—வசப்படுத்தியவர். மலராமுன் மணம் ஏது? "மா" எனப்பூப்பது எளிதாகுமா? சரீரம் அசுத்தம் நீங்கி அமலம் பெறுவது என்றால்—அயன் கையெழுத்தைக் கிழித்து வினையை வெல்வது—விதியை வெல்வது—காலனை உதைப்பது என்றால் எளி

தமிழ் நெடுங்கணக்கு

தமிழபிமானிகளே!

தமிழ் என்பது இனியதொரு மொழி. பழைய பெருநூல்களும், நுண்மாண் நுழைபுலமைப் பேரறிஞர்களும் மொழியை நன்றாகப் போற்றி வளர்த்தனர். தற்காலம், தமிழ் மொழியை வளர்க்க முன்னில் ஒரு கூட்டத்தனர்—பெரும்பாலோர் ஆங்கில அறிஞராகச் சேர்ந்து தமிழ் அரிச்சுவடியைச் சுருக்க முன் வந்திருக்கின்றனர். ஷண்முகத்தெந்தையைக் குருவாகக் கொண்ட அகத்தியனார் அப்பெருமானின் திருநேத்திரங்களை அமைத்து உயிரெழுத்துக்களும், முக்கண் கணக்கை முனைந்து மெய்யெழுத்துக்களும் வகுத்து, இவை சேருங்கால் வரும் தொகையைக்கூட்டி, ஞானவேலை நல்ல ஃகேனமாக்கிப் பிறவாயாக்கை அறவாணர்களாக மக்கள் திகழத்தக்க முறையோராது, குறுக்கவும் நீட்டவும், புதுவது புகுத்தவும் முன்னிபது இந்நூற்றாண்டுக் கலியின் புதுமையேயாம். சங்கங்கள் வளர்த்த தமிழ், காவலர் காத்த தமிழ் பாவலர் பரவி வாழ்த்திய தமிழ் இப்போது—உயரமானவனுடைய காலைத்துறைத்தாற்போல எழுத்தை நீக்குவது சால்புடைச் செயலேயாம்! தமிழறிஞர்களின் உடன்பாடு கண்ணோட்டத்தின் பாலதாயிற்றே! தமிழன்பர் மாநாடு பலதமிழறிஞர்களைக் கேட்காமலும், சில தமிழறிஞர் தீர்மானங்களை வெளியிடாமலும் சூழ்ச்சியாகச் சில புஸ்தகங்களைப் பகிரங்கப்படுத்தவும், சிலர் அதிகாரத்தை அரசாங்கத்தில் நிலைநாட்டவும் முன் வந்தால் தமிழ் பேரறிஞர்கள் தலையசைக்கலாமா? யாழ்ப்பாணப் புலவர்களே! தூக்கமாக இராது மொழியை வளர்க்க முன்னெழுங்கள்! திருநெல்வேலியில், தஞ்சாவூர் திரு. த. வே. உமாமகேசுவரப் பெருந்தகையார் தலைமையில் அறிஞர் மாணவை கூடப்போகின்றது. அதிலாவது உண்மை நிலையைத் திண்மையுடன் காட்டுங்கள்! தமிழ் அபிமானிகளே! விழியுங்கள்! தமிழை ஒற்றுமையாகப் பிழையில்லா வழியில் உயர்த்த வேண்டுவ புரியுங்கள்!

சுபம்.

வ. மு. இரத்திநேசுவரையர்
யாழ்ப்பாணம்.

தின் முடியுமா? இத் திருவாக்குக்களின் அருமை பெருமையை என்னென்று கூறுவது? மாணிக்கமன்றோ இவ்வுண்மையை வெள்ளிடைமலைபோல விளக்கியருளியது! "திருவாசகம்" "திருவாசகம்" என வாய்ப்பறையறைவதால் உண்மை புலப்பட்டுவிடுமா? இதனை உற்று நோக்கினாருண்டோ? வேதாகமபுராண இதிகாசங்களுக்கு உரியார் தாமே எனவும், அவற்றின் வழி ஒழுகுவோர் தாமே எனவும் ஓலமிடுவோர் சிலர் இவ்வரிய பெரிய உண்மையை உணரும் ஆற்றலும் காதலும் இல்லாத இவ்வுண்மை வேதம் முதலிய நூல்களுக்கு மாறுபட்டது எனவும், இதனைக்கூறுவோர் வேதாகமங்களின் வழி ஒழுக அறியாதவர் எனவும் சாதுரியமாகக் கூறி ஒன்றும் அறியாப் பேதையரை ஏமாற்றிச் செத்துப்போவதே முத்தி எனப் பிதற்றிச் சாதலை எதிர் பார்த்த பாவிகளாய் வீற்றிருக்கின்றனர். இவர் இவ்வாறு பிரசாரணம் செய்து உலகமாக்களை ஏமாற்றுவதன் காரணம் உற்று நோக்குழிச் சேயதாகாது.

இத்திருவாக்கின் உண்மையை உணராத சமயப்பிரவர்த்தகர் சிலர் "உடம்பு ஒருவகையாக அமலமடையவேண்டியதென்பதே இதன் பொருளாம் எனவும், சாத்திரங்களைச் "சமயக்கண்" கொண்டு பார்க்கவேண்டும் எனவும், செத்துப்போவதே முத்தி என்னும் தமது கொள்கைக்குப் பங்கம் ஏற்படாதவாறு, சபையார் குறிப்பறிந்து சமயோசிதமாகச் "சொற்பொழிவுகள்" நிகழ்த்திவிடுகின்றனர். இவர் கூறும் அமலம் வெறும் வார்த்தையே என்பது சொல்லாமலே அமையும். பிணநாற்றம் வீசும் மலபாண்டங்கள் அசுத்தம் நீங்காதபோது அமலம் அடைய முடியுமா? பவரோக வயித்தியன் அருளால் சரீரத்தின் இயல்பறியாது — பௌதிக நிறைமுறை யறியாது முளைப்பாற்கண்டு விரும்பியவாறு உண்ணும் உணவுகளாலும் — சிவசம்பந்த மாக்காது சவசம்பந்தமாக்கும் அசைவ உணவுகளாலும், அவற்றின் பயனாகிய அசுத்த அசைவுகளாலும் அசுத்த ஐகாரக் கீழ் நிறைப் பொலிவு ஆக்கமுற்றுச் சாதல் ஏற்படுமேயன்றி அமலம் ஏற்படுவது எப்படி? நித்தியத்துவம் உளதாதல் எப்படி? அசைவ உணவுகளாலும், ஆடம்பர வேடங்களாலும் சைவம்—சிவசம்பந்தம் ஏற்பட்டு விடுமா? மாயையைக் கண்டவரே — வென்றவரே — தந்நிலைப்படுத்தியவரே, காலத்தை வசப்படுத்தியவர் காலனை வென்றவராவர். மாயை இருவகைத்து என்ப. அவை சுத்தம் அசுத்தம் என்பன. சுத்தம் அமரத்தன்மையுடையது; அசுத்தம் மரத்தன்மையுடையது—சாதற்றன்மையுடையது என்ப. "நான் காலனை வென்று விட்டேன் — விதியை வென்று விட்டேன். இருவினை சமப்பட்டு விட்டது. பிரமமாயிருக்கிறேன்" என்று ஒருவன் வாய்ப்பறையறைவது எற்றிற்கு? பிரமாணம்-சான்று வேண்டாமா? வாய்ப்பேச்சே சான்றெனின், மாயையைக்கண்டவர்—வென்றவர் இலக்கணம் என்னை? மாயையைக் கண்டவர்க்கு-தம்வயப்படுத்தினவர்க்குச் சாதலைத்தரும் "ஐ" இருக்க ஆமோ? சாதலைத்தரும் "ஐ" என்றால் என்னை? அதுதான் சா + ஐ = சாயை அஃதாவது அன்னார் சரீரம் சூரியனில்—வெளிச்சத்தில் நிலையும்போது — நிற்கும்போது நிழற்சாயை உடையதாயிராது—இருக்கப்படாது. நிழற்சாயை மாயை—அசுத்தம் – அநித்தியம்—பொய்ம்மை. அஃதற்றால் ஞானசத்திவாய்மை—நித்தியம்—நித்தியம்-மெய்ம்மை. தற்கால மேதாவிகள் சைவமணிகள் எனப்படுவோர் இவ்வுண்மையை அறியுந்திறமுடையரோ? இதனை ஒருவகையான சித்து எனவும் கூறத்துணிவர் உண்மை உரைப்போரைத் "தீவினையாளர்" எனவும் பித்தர் எனவும் மனம் போல விளம்பிவிடுவர். இன்னோரன்னபல விளம்பி உலக மாக்களை ஏமாற்றி விடுவர். உண்மை கண்டுணரமாட்டாதார் வேறு என் செய்வர்? இன்னநீரராற்றான் வேத உண்மைகள் மறைந்து கிடக்கின்றன — உண்மைச்சைவம் வயிற்று வளர்ப்புக்குரிய திருட்டுச்சைவமாக மாறியது — பலர் இகழ்ச்சிக்கும் இடனாயது. இன்னோர் அறியாமைக்கு இரங்குவதே அறிஞர் மாண்பு.

(தொடரும்.)

ஏஜண்டுகள் தேவை.

எமது "வித்தகம்" என்கிற வாரப் பத்திரிகையை விற்பனை செய்ய ஒவ்வொரு ஊரிலும் தக்க ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

"வித்தகம்" புதுச்சேரி.

ஆவினிப்பட்டி.

விவேகாநந்தர் கல்விக் கழக மாணவகர்

திருவாளர் முரு. சேதுராமன் செட்டியார் அவர்கள்

கூறிய

வாழ்த்து.

வாழ்க! செந்தமிழ் வாழ்க நற்சைவம்
வாழ்க! "வித்தகம்" வாழ்க அதிபர்
வியனெறியானே வீறுசேர் பெரியாரும்
நயமுணர் அறிஞரும் நன்கு வாழ்க!
நித்தனருளிய நிமல நன்னூல்
உத்தம போத வுயர்வுடைத்தென்று
"வித்தகம்" விளக்கி வெளிவரல் காணூஉ
சித்தமகிழ்ந்தே சிவனருள் முன்னி
கந்தைய நாமக்கருணைவள்ளலும்
நந்தா வாழ்வை நனி பெற வழுத்துவம்
அதனால்
நிமலசாயுச்சிய நிலைகை கூடும்
அமல போதமும் அமைந் திடல் சரதமே!
இந்நிலை எளிதின் மன்னி
இந்நிலம் யாண்டும் இன்பு கூடுகவே!

சுபமஸ்து.

Opinion
from
S. G. Arulanandha
Teacher
St. John's College
Jaffna, Ceylon.

"I am in receipt of your "very valuable Journal "**Vittagam**". Your articles are "very stimulating of thought "and action. I am a fervent "Christian and you are, to me, "interpreting truly the life of "my **LORD** and master **JESUS**. "Your thoughts about the human body and mukthis are "very precious. May God bless "you.

S. G. Arulanandha.

18—1—1934.

குறிப்பு:—மதாபிமான மென்னும் குறுகிய நோக்கம் சிறிதுமின்றி, நடு நிலைமை வகித்து மேற்கண்ட அபிப்பிராயங்களை முழு அன்புடன் வெளியிட்ட எமது கிரிஸ்துவ சகோதரப் பெரியாருக்கு எமது மனமார்ந்த வணக்கத்தை மிக்க பணிவுடன் தெரிவிக்கின்றோம்.

[ப—ர்.]

BOOKS
by
MAHATMA GANDHI.
The Story of Experiments with Truth.
[Mahatma Gandhi's Autobiography]

In 2 Vol. each Vol.	Rs.	5-8-0
Young India Vol. I. (1919—1922)	,,	4-0-0
Young India Vol. II. (1924—1926)	,,	4-0-0
A Guide to Health	,,	0-12-0
Nethi Dharma	,,	0-8-0
Self-Restraint	,,	1-0-0

Postage Extra.

Nandhi Publishing House. (V.)
PONDICHERRY.

"வித்தகம்" பெற்ற மதிப்புரை

இவ் உத்தமப் பெயர்பூண்ட செந்தமிழ்ப் பத்திரிகைப் பிரதி குருவாரந்தோறும் வெளிவருகின்றது. இப் பத்திரிகையில் சைவாகம விதி முறைகளைப்பற்றியும் பசு பதிபாச விலக்கணங்களைப்பற்றியும் கடவுள் உண்டென்னும் ஆஸ்திக இலக்கணத்தைப்பபற்றியும் அருமையாகவும் பல உபமான திருஷ்டாந்த பூர்வமாகவும் வெகு அழகாக எழுதப்பட்டு விளங்குகின்றது. ஒவ்வொரு வியாசங்களும் படிக்கப்படிக்க இனிமை யளித்து வருகிறது. இதன் ஆசிரியரின் தமிழ் நடைப் போக்குக் கற்றவர்களும் மற்றவர்களும் பாராட்டிக் கொண்டாடத் தக்கதாயிருக்கிறது. இத்தகைய பத்திரிகை நம் புதுவைக்கு மிகவும் அவசியமாகும். தமிழ் நயமும் கடவுள் பயமும் அருகிவரும் இச் சமயம் இப்பத்திரிகைத் தோன்றியது புதுவை மக்களின் பாக்கியமென்றே சொல்லுவோம். இப்பத்திரிகையைத் தமிழராயினோர் ஒவ்வொருவரும் பரிவுடன் வாங்கிப் படித்துப் பயனுறய்க்குமாறு சிபாரிசு செய்கின்றோம். இதன் ஆசிரியர் நமது சுகாபிவிருத்தினியையும் மதித்து வாரந்தோறும் நம் பார்வைக்கு அனுப்பி வரும் பெருந்தன்மைக்கு நன்றியறிந்த வந்தனத்துடன் நமது அபிவிருத்தினியையும் பரிவர்த்தனமாக அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம்.

குறிப்பு:—மேற்கண்ட மதிப்புரையை வெளியிட்ட சுகாபிவிருத்தினி பத்திரிகையின் போராசிரியராக விளங்கும் பெரியார்க்கு எமது தாழ்மையான வணக்கம் என்றும் உரிமையாகற்பாலதே. [ப—ர்]

"வித்தகம்"

வருட சந்தா விவரம்.

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 3—0—0
மலாயா, சிங்கப்பூர், சைகோன்	ரூ. 4—0—0

வித்தக நிலயம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry.
Le Gérant R. Nagarattinam.